# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1791/43 - 2013 ජනවාරි මස 04 වැනි සිකුරාදා - 2013.01.04

*1791/43 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் சட்டவாக்கத்தின் (423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்**
**இலங்கை**

1. திருத்தப்பட்டவாறான 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கத்தின் 423 ஆம் அத்தியாயம்) ஏற்புடைத்தான விதத்தில் 7, 10, 11, 15 மற்றும் 30 (5) ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்ககா 1955 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு சட்டத்தின் நியதிகளில் குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில் முயற்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ள கம்பனியொன்றிலுள்ள இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை அங்கீகரிக்கப்பட்ட நாட்டு நிதியங்கள், அங்கீகரிக்கப்பட்ட பிராந்திய நிதியங்கள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள், மற்றும் இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர் உட்பட இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்டவர்கள் ஆகியோருக்கு பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

(i) முன்னுரிமைப் பங்குகளின் காலம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்றாண்டுகளுக்கு குறைவாக இருத்தல் கூடாது ;

(ii) பங்குகளை மீட்பது வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டிற்கு முன்னதாக தொடங்கப்படக்கூடாது என்பதுடன் இது எஞ்சிய காலப்பகுதி முழுவதிலும் விகிதசமமான முறையில் கட்டம் கட்டமாகவும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் ;

(iii) அவ்வாறு வழங்கப்பட்ட பங்குகள் சாதாரண பங்குகளுக்கு மாற்றத்தக்கனவாக இருப்பின் அத்தகைய மாற்றுதல்கள் எந்தவொரு நேரத்திலும் மேற்கொள்ள முடியும் என்பதுடன் திருத்தப்பட்டவாறான 2002.04.19 ஆந் திகதியிடப்பட்ட 1232/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட விதிவிலக்கல்கள் மற்றும் வரையறைகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும் ;

(iv) இத்தால் கொடுக்கல் வாங்கல் தரப்பினராக அனுமதிக்கப்பட்டவர் இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவராக இருக்குமிடத்து, அத்தகைய ஆள் இலங்கைக்கு வெளியே வதிபவர் என்பதற்கு ஆதாரமாக பங்குமாற்றல் படிவத்திற்கும் அல்லது பங்கு விண்ணப்பப்படிவத்தில் எது ஏற்புடைத்தானதோ அதில் பயன்மிக்க வெளிப்படுத்துகையொன்றினை செய்தல் வேண்டும் ;

(v) இத்தால் அனுமதிக்கப்பட்ட பங்குகளின் வழங்கல் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளை செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் சார்பில் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்க இலங்கையிலுள்ள அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்ட பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து அல்லது அக்கணக்குகளுக்கு மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும் ;

(vi) இங்கே அனுமதிக்கப்பட்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று, உரிமம்பெற்ற பங்குதரகர் அல்லது அதிகாரம்பெற்ற வேறு எவரேனும் ஆள் பங்குகளின் விற்பனைப் பெறுகைகள், பங்கு இலாபங்கள் மற்றும் தரகுகள் போன்ற கொடுப்பனவுகளை மேலே V ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குகள் முதலீட்டு கணக்குகளுக்கு அல்லது கணக்குகளிலிருந்தே மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. பின்வருவனவற்றிற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது :-

(அ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட நாட்டு நிதியங்கள், அங்கீகரிக்கப்பட்ட பிராந்திய நிதியங்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதியும் தனிப்பட்டவர்களினால் 1 ஆம் பிரிவின் iv, v மற்றும் vi இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு 1 ஆம் பந்தியின் நியதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளுக்கான மாற்றல்களுக்கு ;

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 1 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட vi இன் நிபந்தனைகளுக்கு இணங்க இத்தால் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு ஏதேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அல்லது வரவு வைப்பதற்கு ;

3. பின்வருவனவற்றைப் பாதிக்கும் விதத்தில் அல்லது தாக்கத்தினைக் கொண்டிருக்கும் விதத்தில் எவ்வித பொருள் கோடலும் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடாது :-

(அ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையினை மேற்கொண்டமையின் மூலம் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து எவ்விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளனவோ அத்தகைய விதிவிலக்கல்களின் அளவிற்கு ;

(ஆ) எழுதப்பட்ட வேறேதேனும் சட்டங்களின் ஏற்பாடுகள்.

பி. எச். ஓ. சந்திரவன்ச,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

கொழும்பு,
2012, திசெம்பர் 04.

1- 557

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.